**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 20-10-2023**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-20 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-21 | 2023-10-22 | 2023-10-23 | 2023-10-24 | 2023-10-25 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 2.0 | 2.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 34.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 25.0 | 25.0 | 25.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 78 | 78 | 78 | 76 | 76 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 72 | 72 | 72 | 70 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 6 | 6 | 5 | 5 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 20 | 20 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அக்டோபர் 21,22,23 ஆகிய தேதிகளில் மிக லேசான முதல் லேசான மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; அடுத்த ஐந்து நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை 33.0°C-34.0.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24.0°C-25.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 70-78% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 4.0-6.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடக்கு முதல் வடகிழக்கிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

25.10.2023 முதல் 31.10.2023 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பு நிலையினை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

## குறுஞ்செய்தி :

அக்டோபர் 21,22,23 லேசான மழை பெய்யக்கூடும், எனவே விவசாயிகள் பயிர்களுக்கு பூச்சிக்கொல்லி தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும் & மண்ணின் ஈரபதத்தினை பொறுத்து நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சிகள் மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் 2.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசிபேட் 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3. இலைக் கருகல் நோய்- நடவுக்கு பிறகு 30 மற்றும் 45 நாட்களுக்குள் ஏக்கருக்கு இரண்டு முறை காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | காய்கறி பயிரான மிளகாயில் தற்போது நிலவும் வானிலை காரணமாக சாம்பல் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கட்டுப்படுத்த நனையும் கந்தக தூள் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 3 கிராம் அல்லது கார்பன்டாசிம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற வீதம் மூன்று முறை 15 நாட்கள் இடைவெளியில் அறிகுறிகள் தோன்றியதிலிருந்து தெளிக்கவும். |
| கத்திரிக்காய் | காய்கறி பயிரான வெண்டையில் தற்போது நிலவும் வானிலை காரணமாக மஞ்சள் நரம்பு தேமல் நோய் தாக்கம் ஏற்படலாம், கட்டுப்படுத்த அசாடிராக்டின் 10 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் அல்லது தியாமீதோக்சம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| பாகற்காய் | தற்போது நிலவும் வானிலை காரணமாக பாகற்காயில் பழ ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த நச்சு உணவு/பொறி மெத்தைல் யூஜினால் + மாலத்தியான் 50 EC இரண்டையும் சம அளவு கலந்து 1:1 விகிதத்தில் ஒவ்வொரு பாலித்தீன் பைகளில் 10 மில்லி லிட்டர் அளவுக்கு எடுத்து நச்சுப்பொறியாக ஏக்கருக்கு 10 வீதம் வைக்கலாம். |